147

அரசு 17/2/2020

A

பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
27 JAN 2020
சென்னை - 600 028

003813

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – செல்வி.வி.சாருமதி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்2) துறை**

**அரசாணை (3ப) எண்.10**

**நாள் 24.01.2020**
**விகாரி, தை–10,**
**திருவள்ளுவர்ஆண்டு–2051.**

**படிக்கப்பட்டவை:**

1. பதிவுத்துறைத் தலைவரின் நடவடிக்கைகள் எண்.43559/கே2/2018–1, நாள் 30.01.2019.
2. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண்.38146/கே2/2018, நாள் 28.11.2019.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

******

**ஆணை:-**

பதிவுத்துறையில், இராமநாதபுரம் பதிவு மாவட்டத்தில் இராஜசிங்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்தினிடையே 21.11.2017 அன்று காலமான திரு.பி.விஜயகுமார் என்பவரின் மனைவி திருமதி.வி.கனககுந்தரி, தமது மகள் செல்வி.வி.சாருமதி என்பவருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 09.08.2018–ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினை பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், செல்வி.வி.சாருமதி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார். அதன்படி, செல்வி.வி.சாருமதி, 08.02.2019 முற்பகலில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். செல்வி.வி.சாருமதி, இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறைத்தலைவர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. பதிவுத்துறைத் தலைவரின் செயற்குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி.வி.சாருமதி என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 08.02.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யலாம் என கருதப்படுகிறது.

3. தற்போது பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 01.08.2018 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.100–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பதிவுத்துறையில், இராமநாதபுரம் பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி.வி.சாருமதி என்பவருக்கு 08.02.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.107/ட்டி1/2020, நாள் 08.01.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.1029/ஜி2/2020, நாள் 20.01.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.பாலச்சந்திரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

✓செல்வி.வி.சாருமதி, இளநிலை உதவியாளர்,
இராமநாதபுரம் பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர் மூலமாக)
பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28 (இணைப்புகளுடன்)

<u>நகல்:</u>

தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு(ட்டி1)த்துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்த(ஜி2)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

24/1/2020

பிரிவு அலுவலர்.